Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 30.05.2024 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவண குமார்

நாள் 30.05.2024 வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாள் பயணமாக, இன்று மாலை கன்னியாகுமரி வந்துள்ளார்.

57 தொகுதிகளில், நாளை மறுநாள் நடைபெறவுள்ள, ஏழாவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், இன்று மாலையுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இந்திய பொருளாதாரம் பற்றிய S AND P தர மதிப்பீடு, உயர்த்தப் பட்டுள்ளதை, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வரவேற்றுள்ளார்.

தென்மேற்குப் பருவமழை, கேரளத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், லட்சத்தீவு மற்றும் தென் தமிழகத்தின் சில பகுதிகளிலும், இன்று தொடங்கி உள்ளது.

## மோடி – குமரி (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடி 3 நாள் பயணமாக இன்று மாலை கன்னியாகுமரி வந்துள்ளார். திருவனந்தபுரம் வழியாக ஹெலிகாப்டர் மூலம் கன்னியாகுமரி வந்து சேர்ந்த அவர், பகவதி அம்மன் கோயிலில் வழிபட்ட பின்னர், தனிப் படகு மூலம், விவேகானந்தர் பாறை நினைவு மண்டபத்திற்குச் சென்று, அங்கு தியானத்தில் ஈடுபடுகிறார். 3 நாள் தியானத்திற்குப் பின்னர், அவர் வரும் சனிக்கிழமை கரை திரும்பி, திருவனந்தபுரம் வழியாக டெல்லி செல்கிறார். முன்னதாக அன்றைய தினம், குமரிமுனையில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கும், மலர் அஞ்சலி செலுத்துகிறார்.

## ஏழாம் கட்டம் – 1 (18)

7 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட 57 தொகுதிகளில் நாளை மறுநாள் நடைபெறவுள்ள, ஏழாவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், இன்று மாலையுடன் முடிவுக்கு வந்துள்ளது. கடைசி நாளான இன்று, சம்பந்தப்பட்ட அனைத்து தொகுதிகளிலும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு.

நரேந்திர மோடி, பஞ்சாப் மாநிலம் ஹோஷியார்பூரில் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி, ஓட்டு வங்கி அரசியலில் ஈடுபடக்கூடிய சுயநலக் கூட்டணி என குற்றம் சாட்டினார். அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட்டதை காங்கிரஸ் தொடர்ச்சியான முறையில் எதிர்த்ததற்கு, ஓட்டு வங்கி அரசியலே காரணம் என்றும், தற்போது இதே காரணத்தினால், குடியுரிமை திருத்த சட்டத்தை அக்கட்சி எதிர்ப்பதாகவும் அவர் கூறினார். அட்டவணை இனத்தினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்பட்ட வகுப்பினரின் உரிமைகளைப் பறிக்க எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று பிரதமர் தெரிவித்தார். இட ஒதுக்கீடு பற்றிய எதிர்க்கட்சிகளின் எண்ணங்கள் மிகவும் ஆபத்தானவை என்றும், மத அடிப்படையில் நாட்டை பிளவு படுத்துவதற்கான சதி என்றும் அவர் கூறினார்.

ஏழாம் கட்டம் – 2 (18)

உத்தரபிரதேசத்தில், மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ராஜ்நாத் சிங் இன்று குஷிநகர் பகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். நடப்பு மக்களவை தேர்தலில் பிஜேபி 400க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறும் என்று அவர் கூறினார். பிஜேபி, மத்தியில் 3ஆவது முறையாக பதவிக்கு வந்தவுடன், ஒரே நாடு-ஒரே தேர்தல் குறித்து நடவடிக்கை எடுக்கும் என்றும், இதனால் அடிக்கடி

தேர்தல் வருவதை தவிர்த்து, மக்களவைக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். திரு. ராஜ்நாத் சிங் இன்று உத்தரபிரதேசத்தில் சந்தாலி உள்ளிட்ட தொகுதிகளிலும் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், கோசி, மகாராஜ்கஞ்ச் ஆகிய தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பீஹாரில், ஆர்ஜேடி தலைவர் திரு. லாலு பிரசாத் யாதவ், இன்று பாடலிபுத்ரா தொகுதியில், சாலை பவனி நடத்தினார். மூத்த ஆர்ஜேடி தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், மாநிலத்தில் தேர்தல் நடைபெறவுள்ள அனைத்து 8 மக்களவை தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு, பிரச்சார பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். மாநில பிஜேபி தலைவர் திரு. சாம்ராட் சௌத்ரி, லோக் ஜனசக்தி கட்சியின்

**ஏழாம் கட்டம் –3 (18)**

ராம்விலாஸ் பிரிவுத் தலைவர் திரு. சீராக் பாஸ்வான் ஆகியோரும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

ஒடிசாவில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, இன்று பாலாசோர் மக்களவை தொகுதியில், தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். மாநிலத்தில் ஆளும் பிஜூ ஜனதா

தளத்திற்கும், பாரதீய ஜனதாவிற்கும் இடையே, பரஸ்பர அரசியல் ஆதாயம் குறித்து, ரகசிய கூட்டாண்மை இருப்பதாக அவர் குற்றம் சாட்டினார். பிஜேபிக்கு எதிராக போராடியதற்காக தம் மீது 24 வழக்குகள் போடப்பட்டுள்ள நிலையில், பிஜேடி தலைவர், திரு. நவீன் பட்நாயக் மீதான குற்றச்சாட்டுகளில் எந்த வழக்கும் இல்லை என்று திரு. ராகுல் காந்தி குறிப்பிட்டார். திரு. நரேந்திர மோடி, திரு. நவீன் பட்நாயக் ஆகிய இருவரும் இணைந்து தொழில் அதிபர்களுக்கு ஆதரவாகவே செயல்படுவதாகவும், ஏழைகளுக்கு ஆதரவாக இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ஜார்க்கண்டில், மாநில பிஜேபி தலைவர் திரு. பாபுலால் மராண்டி இன்று சாகிப்கஞ்ச் உள்ளிட்ட தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மாநிலத்தில் அனைத்து துறைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த, மக்கள், பிஜேபி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும்

ஏழாம் கட்டம் – 4 (4)

என அவர் கேட்டுக்கொண்டார். ஜார்கண்ட் முக்தி மோட்சாவைச் சேர்ந்த மூத்த தலைவர் திருமதி கல்பனா சோரேன், தும்கா உள்ளிட்ட தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். ஆர்.ஜே.டி மற்றும் இடதுசாரி கட்சிகளின் தலைவர்களும் பல்வேறு தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

## மோடி – ராக்கெட் (11)

தனித்தனியான உதிரி பாகங்களை இணைத்து தயாரிக்கப்படும் எஞ்சினுக்குப் பதிலாக, 3-D printing என்னும் முப்பரிமாண அச்சிடல் முறையில் தயாரிக்கப்பட்ட எஞ்சினுடன் கூடிய உலகின் முதலாவது ராக்கெட்டை விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ள, சென்னை ஐஐடி உயர் கல்வி கழகத்தின் **அக்னிகுல் காஸ்மோஸ்** நிறுவனத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார். இந்த அக்னிபான் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது இந்திய விண்வெளித்துறையின் வரலாற்றில் முக்கியத் தருணம் என்றும், இந்திய இளைஞர் சக்தியின் அபார ஆற்றலுக்கு இதுவே சான்றாகும் என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். அக்னிகுல் காஸ்மோஸ் அணியினரின் எதிர்கால முயற்சிகளும் வெற்றி பெற பிரதமர் வாழ்த்து தெரிவித்துக் கொண்டுள்ளார்.

## பொருளாதாரம் – மதிப்பீடு 1 (19 )

உலக நாடுகளின் பொருளாதாரத்தை தரவரிசைப் படுத்தும் S AND P நிறுவனம் இந்திய பொருளாதாரம் பற்றிய மதிப்பீட்டை, ஸ்திரமான பொருளாதாரம் என்னும் நிலையில் இருந்து, நேர்மறைப் பொருளாதாரம் என்னும் நிலைக்கு உயர்த்தி இருப்பதை, மத்திய நிதியமைச்சர் திருமதி

நிர்மலா சீதாராமன் வரவேற்றுள்ளார். வளர்ச்சிக்கான வலுவான செயல்பாடுகளையும், வரவிருக்கும் ஆண்டுகளில் பொருளாதாரத்தில் திகழத் தக்க சாதகமான சூழலையும், பிரதிபலிக்கும் வகையில் இது அமைந்து இருப்பதாக, சமூக ஊடகப்பதிவு ஒன்றில் அவர் கூறினார். 2014ஆம் ஆண்டு முதல், தொடர்ச்சியான முறையில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட, பருமநிலைப் பொருளாதார சீர்திருத்தங்களும், கணிசமான மூலதனச் செலவினங்கள், மற்றும், நிதிக் கட்டுப்பாடுகளும், தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய வலுவான தலைமையுமே இதற்கு காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார். உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் பாதையில் இந்தியா வெற்றிகரமாக பயணித்து வருவதாகவும், நிதியமைச்சர் கூறியுள்ளார்.

இதற்கிடையே இந்திய பொருளாதாரம் பற்றிய S AND P நிறுவனத்தின் தர மதிப்பீடு உயர்த்தப்பட்டதற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின், கொள்கை ரீதியிலான தலையீடுகளும், பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுமே காரணம்

பொருளாதாரம் – மதிப்பீடு 2 (15 )

என்று, பிஜேபி கூறியுள்ளது. பிஜேபி செய்தித் தொடர்பாளர் திரு. ஜாபர் இஸ்லாம் புதுடெல்லியில் இன்று இது குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், பொருளாதாரத்தை ஊக்கப்படுத்த, பிஜேபி தலைமையிலான அரசு, கடந்த 10 ஆண்டுகளில், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு,

அமைப்பு ரீதியிலான பல சீர்திருத்தங்களை அமல்படுத்தி இருப்பதாக கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ஆட்சியில், **இந்தியாவில் வர்த்தகம் புரிதல்** எளிதாகி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில், கொள்கை முடக்கத்தால் பாதிக்கப்பட்டு, உலகின் 5 பலவீனப் பொருளாதாரங்களில் ஒன்றாக திகழ்ந்த இந்தியப் பொருளாதாரத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசுதான், திறம்பட்ட **கொள்கைத் தலையீடுகளைக்** கொண்டு வந்ததாக, பிஜேபி செய்தி தொடர்பாளர் கூறினார். கொரோனா பெருந்தொற்று காலத்திலும், ருஷ்யா-உக்ரைன் போரின் போதும், அரசு பின்பற்றிய நிலைப்பாடுகளே இதற்குச் சான்றாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**மோடி - கோவா (10 )**

இன்று கோவா மாநிலத்தின் உதய நாளை ஒட்டி, பிரதமர் திரு.நரேந்திர மோடி அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். கோவாவின் துடிப்பான கலாச்சாரம், வளமான பாரம்பரியம், மற்றும், இயற்கை வனப்பு குறித்து, நாடே பெருமிதம் அடைவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். நவீனத்தை அரவணைக்கும் அதே வேளை, இயற்கை வனப்பையும் பாதுகாக்க, கோவா காட்டி வரும்

உறுதிப்பாடு, வளங்குன்றா வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்றும், அவர் தெரிவித்துள்ளார். கோவா மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் வளத்தைப் பெருக்க, மத்திய அரசு தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் மேலும் உறுதி அளித்துள்ளார்.

காங்கிரஸ் - மோடி(10)

மகாத்மா காந்தி குறித்து அண்மையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டதாக கூறப்படும் கருத்துக்களை காங்கிரஸ் கண்டித்துள்ளது. காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, புதுடெல்லியில் இன்று இது குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், 80க்கும் மேற்பட்ட நாடுகளில், மகாத்மா காந்திக்குச் சிலைகள் இருப்பதாகவும், காந்தியை உலகிற்கே தெரியும் என்று கூறினார். நடப்பு 18ஆவது மக்களவை தேர்தல், மக்கள் அனைவரும் ஜாதி, மதம், மொழி, இனம் போன்ற எவ்வித பேதங்களும் இன்றி, ஜனநாயகத்தையும், பாதுகாக்கப் போராடிய தேர்தலாக நீண்ட காலம் நினைவில் கொள்ளப்படும் என்று திரு.மல்லிகார்ஜுன கார்கே மேலும் குறிப்பிட்டார்.

வானிலை (17)

தென்மேற்குப் பருவமழை, கேரளத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், லட்சத்தீவு மற்றும் தென் தமிழகத்தின் சில பகுதிகளிலும், இன்று தொடங்கி உள்ளது. தற்போது, தென் தமிழகப் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 1, 2 ஆகிய தேதிகளில், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், ஈரோடு, நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் எதிர்பார்க்கப் படுகிறது. வரும் 5ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே மீனவர்கள் வரும் 1ஆம் தேதி வரை, தமிழக கடலோரப் பகுதிகளுக்கும், வரும் 3ஆம் தேதி வரை, வங்கக் கடல் பகுதிகளுக்கும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, குமரி மாவட்டம், முள்ளங்கினாவிளை-யில் 4 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. கோவை மாவட்டம் வால்பாறை உள்ளிட்ட இடங்களில் 3 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## இந்தி இதழியல் (8)

இந்தி இதழியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. 1826ஆம் ஆண்டு மே 30ஆம் தேதி அன்றுதான், **உதந்த் மார்த்தாண்ட்** என்னும், நாட்டின் முதலாவது, இந்தி நாளேடு வெளியிடப்பட்டதைக் கருத்தில் கொண்டு, இந்தி பத்திரிக்கையாளர்கள், ஆண்டு தோறும் இந்நாளை, இந்தி இதழியல் தினமாகக் கொண்டாடுகிறார்கள். உண்மை மற்றும் துணிச்சலுடன் கூடிய இந்தி பத்திரிக்கையாளர்கள், சமூகத்தில் பொது நன்மையை மேம்படுத்துவதில் ஆற்றி வரும் முக்கியப் பங்களிப்பை பாராட்டும் வகையில், இன்றைய தினம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாள் பயணமாக, இன்று மாலை கன்னியாகுமரி வந்துள்ளார்.

57 தொகுதிகளில், நாளை மறுநாள் நடைபெறவுள்ள, ஏழாவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், இன்று மாலையுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இந்திய பொருளாதாரம் பற்றிய S AND P தர மதிப்பீடு, உயர்த்தப் பட்டுள்ளதை, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வரவேற்றுள்ளார்.

தென்மேற்குப் பருவமழை, கேரளத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், லட்சத்தீவு மற்றும் தென் தமிழகத்தின் சில பகுதிகளிலும், இன்று தொடங்கி உள்ளது.